IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S.No. 118 /2014
Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருஷ்ணன் | Caste | : - |
| Father's Name | : மார்கபந்து | Calling | : - |
| Village | : முத்தரசிகுப்பம் கிராமம் | Religion | : இந்து |
| Taluk | : - | Age | : 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 5 day of September, 2019.

Cross Examination Continuation

1997-ம் ஆண்டு எழுதப்பட்ட கூர்சீட்டை அடிப்படையாக வைத்து நான் பாகப்பிரிவினை கோரி வருகிறேன் என்றால் சரிதான். எனது வழக்குரையில் தாவா சொத்துக்கள் மூதாதையர் சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1951-ல் எனது தந்தை மார்கபந்துவும், அவரது தம்பி நடராஜ் ஆகியோருக்கு இடையே நடைபெற்ற கூர்ச்சீட்டினுடைய நகலை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதன் அசல் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கூர்சீட்டு தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நான் தமிழில் மொழி பெயர்த்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதை மொழி பெயர்த்தவர் வாலாஜாபேட்டையைச்சேர்ந்த கோவிந்தராஜ் ஆவார். கோவிந்தராஜ் எம்.ஏ, படித்துள்ளார் அவரை நீதிமன்றத்தில் வைத்து தான் தெரியும். கோவிந்தராஜ் எம்.ஏ படித்துள்ளார் என்ற விவரத்திற்கும் தெலுங்கிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்ப்பு செய்யத் தெரியும் என்ற விவரத்திற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் வெல்டிங் வேலை பார்த்து வருகிறேன். 1995-லிருந்து 2005 வரை மெக்கானிக்கல் எல்பராக வேலை பார்த்து வந்தேன். அதற்கு முன்பு வீட்டிலிருந்தேன். எனக்கு 1978-ம் ஆண்டு திருமணம் ஆனது. திருமணம் ஆன பிறகு 1 வருடம் முத்தரசிகுப்பம் கிராமத்திலிருந்து விவசாயம் பார்த்தேன். பிறகு பெங்களூரு சென்றுவிட்டேன். பெங்களூரில் பென்னி மில்லில் வேலை

பார்த்தேன். பெங்களூரில் 12 வருடம் வசித்து வந்தேன். பெங்களூரில் வாடகை வீட்டில் வசித்து வந்தேன். 12 வருடத்திற்கு பிறகு மீண்டும் சொந்த ஊருக்கு வந்துவிட்டேன். எனது தகப்பனார் மார்பந்து 4.12.1998-ல் இறந்தார். 20.7.1999-ல் எனது தாயார் இறந்துபோனார். எனது பெற்றோர்கள் இறக்கும் வரை எனது தம்பி நீலமேகம் வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.222/4-ல் இருந்த வீட்டில் எனது பெற்றோர் வசித்து வந்தனர். எனது தம்பி சர்வே எண். 222/1ஈ என்ற எண்ணில் குடியிருந்து வந்தார். இரண்டு சர்வே எண்களுக்கும் இடையே ஒரு வரப்பு உள்ளது என்றால் சுமார் 100 அடி வித்தியாசம் இருக்கும். எனது பெற்றோர் குடியிருந்த வீடு எனது பெற்றோரின் சுயசம்பாத்தியத்தில் கிரையம் வாங்கியது என்றால் சரியல்ல எனது தாத்தாவின் சொத்திலிருந்து வந்த வருமானத்திலிருந்தும் எனது அண்ணன் ஆந்திராவில் இருந்து சம்பாதித்து கொடுத்த பணத்திலிருந்தும் நான் விவசாயம் செய்து கொடுத்த பணத்திலிருந்தும் கிரையம் வாங்கப்பட்டது. 30.10.1996 அன்று தாவா சொத்தை பொறுத்து எனது தகப்பனாரும், தாயாரும் பிரதிவாதி பெயருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாலாஜா நீதிமன்றத்தில் எனது சகோதரர் செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் அசல் வழக்கு எண்.84/2000 என்ற வழக்கை தாக்கல் செய்தபோது தான் செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி தெரியவந்தது. செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று அதை ரத்து செய்யக்கேட்டு நிவாரணம் எதுவும் கோரவில்லை. வா.சா.ஆ2 ஆவணத்தை எழுதியது கணக்கர் சுப்பிரமணி என்பவர் ஆவார். பாகப்பிரிவினை பத்திரம் எழுதும்போது எனது தகப்பனார் வாங்கிய கடன் இருந்தது என்றால் சரிதான். வ.சா.ஆ2 ஆவணத்தில் சர்வே எண். 120-ல் உள்ள மெத்தை வீட்டையும், சர்வே எண். 186-ல் உள்ள 90 செண்ட் நிலத்தையும் விற்று பொதுக்கடனை அடைக்கவேண்டும் என குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு நீலமேகம் எனக்கு வீடும், நிலமும் வேண்டும் என கேட்டதாலும் கடனை தானேநேர் செய்ய ஒப்புக்கொண்டதாலும், சதாசிவம் சர்வே எண 186-ல் 93 செண்ட் நிலத்தை வைத்துக்கொண்டு எனது தந்தை பெற்ற கடனை நேர்செய்வதாக சொன்னதாலும் எனக்கு கடனை

நேர்செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. சர்வே எண். 186-ல் 93 செண்டை பொறுத்து எனது தகப்பனார் சதாசிவத்திற்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ2 ஆவணத்தில் பொதுக்கடன்கள் ஏதும் இல்லை என்ற வாசகம் அந்த ஆவணம் எழுதும்போதே திருத்தப்பட்டது என்றால் சரிதான்.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.